A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 59 / 2023**

திருமதி T. பத்மாவதி,
1025/5A1, றைஸ்மில் ஜங்ஷன்,
மதுசூதனபுரம், கீழகிருஷ்ணன்புதூர்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 601.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு T. விக்னேஷ்)

எதிர்

1. இளநிலை பொறியாளர்/விநியோகம்/ கீழகிருஷ்ணன்புதூர்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கீழகிருஷ்ணன்புதூர் – 629601.

2. செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு K. ரமேஷ், இளநிலை பொறியாளர்/விநியோகம்/ கீழகிருஷ்ணன்புதூர்
திரு N.K. ஜவஹர் முத்து, செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்)

**மனு பெறப்பட்ட நாள்: 11-08-2023**

**கேட்புரை நாள்: 11-10-2023**

**ஆணை நாள்: 25-10-2023**

11.08.2023 அன்று பெறப்பட்ட திருமதி T. பத்மாவதி, 1025/5A1, ரைஸ்மில் ஜங்ஷன், மதுசூதனபுரம், கீழகிருஷ்ணன்புதூர், கன்னியாகுமரி மாவட்டம் – 629 601 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 59/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 11.10.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில்

எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மின்வாரியத்தால் நடப்பட்ட மின்கம்பத்திற்கு உரிய மதிப்பிடு கட்டணத்தை இணையத்திலிருந்து நீக்கக்கோரி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மின்வாரியத்தால் நடப்பட்ட மின்கம்பத்திற்கு உரிய மதிப்பீடு கட்டணத்தை இணையத்திலிருந்து நீக்கக்கோரி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 புதிய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் இளநிலை பொறியாளர்/விநியோகம்/கீழகிருஷ்ணன்புதூர் அவர்கள் இடத்தை ஆய்வு செய்து மின்னிணைப்பு வழங்க மதிப்பீடு தயார் செய்து பொதுபாதை என கூறியதன் அடிப்படையில் மின்கம்பம் நட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், பொதுபாதை எனில் அது தொடர்பாக வருவாய்த்துறை ஆவணங்களை சமர்பிக்குமாறு கோரப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 மேல்முறையீட்டாளரால் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் பொதுப்பாதை எனில் தலைவர், பள்ளம் துறை ஊராட்சி அவர்களிடம் அதற்குரிய சான்றிதழ் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், இதுநாள் வரை சான்றிதழ் பெறப்படாததால் மின்கம்பத்திற்கான மதிப்பீட்டு கட்டணம் செலுத்துமாறு எதிர்மனுதாரரால் கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.4 எனவே தனக்கு விதித்துள்ள மதிப்பீட்டு கட்டணத்தை நீக்கக் கோரி மேல்முறையீட்டாளர் கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 05.07.2023 அன்று அணுகியுள்ளார்.

2.5 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம் 25.05.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 25.05.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரர் புதிய மின்னிணைப்பு வேண்டி 28.11.2022 அன்று இணையதளம் வழியாக விண்ணப்பித்து 06.12.2022 அன்று பதிவுகட்டணம் செலுத்தியதின் அடிப்படையில் இளநிலை பொறியாளர்/ விநியோகம்/ கீழகிருஷ்ணன்புதூர் அவர்கள் இடத்தை ஆய்வு செய்து மின்னிணைப்பு வழங்க மதிப்பீடு தயார் செய்து அனுமதி பெற்று மின்கம்பம் நட்டு வீதப்பட்டி VI-ல் 26.12.2023 மின்னிணைப்பு வழங்கப்பட்டது.*

*மனுதாரரிடம் புல எண் 1025/5-ல் உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போடப்பட்டுள்ள பாதை பொதுபாதை எனில் அது சம்பந்தமாக வருவாய்த்துறை ஆவணங்களை சமர்பிக்குமாறு கேட்டுகொள்ளப்பட்டது. மனுதாரர் பொது பாதைக்கான ஆவணங்கள் சமர்பிக்காத காரணத்தால் இளநிலைபொறியாளர்/ விநியோகம்/கிழகிருஷ்ணன்புதூர் அவர்கள் க.எண்.19/இ.நி.பொ/கீ.கி.பு /கோ.தனி/2023, நாள் 21.01.2023-ன்படி தலைவர், பள்ளம் ஊராட்சிதுறை, பள்ளம் அவர்களிடம் புலஎண் 1025/5A-ல் உள்ள பாதைகள் பள்ளம் ஊராட்சிக்குட்பட்ட பொதுபாதை எனில் அதற்குரிய சான்றிதழ் வழங்குமாறு கேட்டுகொள்ளப்பட்டது. பள்ளம் ஊராட்சி தலைவர் அவர்கள் தலைவர். பள்ளம் துறை ஊராட்சி, பள்ளம் கடித நாள் 28.01.2023 ன்படி 1025/5A-ல் உள்ள பொது பாதை என பள்ளம் ஊராட்சிக்கு இதுவரை எழுதி தரப்படவில்லை என தெரிவித்துள்ளார். அதனால் க.எண்.40/இ.நி.பொ/ கீ.கி.பு/ கோ.கட்டு/2023, நாள் 22.02.2023-ன்படி தனியார் பாதையில் நடப்பட்ட புதிய மின்கம்பத்திற்கான மதிப்பீட்டு கட்டணம் ரூ.19610/-யை 22.03.2023-க்குள் வரைவோலை மூலம் செலுத்தி ரசீது பெற்று கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்பட்டது. பின்னர் திருமதி பத்மாவதி, கீழகிருஷ்ணன்புதூர் அவர்கள் 27.02.2023 அன்று அலுவலகத்தில் அளித்த நன்கொடை பத்திர நகலில் சம்பந்தப்பட்ட பாதை வேறு ஊராட்சியான கீழகிருஷ்ணன்புதூர் ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் மேதகு ஆளுநர் பெயருக்கு சமர்பிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே இளநிலை*

*பொறியாளர்/ விநியோகம்/ கீழகிருஷ்ணன்புதூர் அவர்கள் மீண்டும் க.எண்: 63/இ.நி.பொ/கீ.கி.பு/ கோ.தணி/ 2023, நாள் 16.03.2023–ன்படி தலைவர், பள்ளம் ஊராட்சிதுறை. பள்ளம் அவர்களிடம் மேற்படி புலஎண்:1025/5A–க்குரிய பாதை பள்ளம் ஊராட்சிக்குட்பட்டது எனில் அதற்குறிய சான்றிதழ் வழங்க கேட்டுகொள்ளப்பட்டது. அதற்கு தலைவர், பள்ளம் ஊராட்சிதுறை, பள்ளம். நாள் 27.04.2023–ன்படி பள்ளம் ஊராட்சிக்குட்பட்ட புலஎண்:1025/5A–ல் உள்ள பாதையை 16.09.2022 அன்று தவறுதலாக கீழகிருஷ்ணன்புதூர் ஊராட்சிக்கு எழுதி கொடுத்ததால் பாதையை 13.04.2023 அன்று பிழை திருத்த பத்திரம் மூலம் பள்ளம் ஊராட்சிக்கு தற்போது மேற்படி பாதையை பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளார் என தலைவர். பள்ளம் ஊராட்சிதுறை, பள்ளம். நாள் 27.04.2023–ன்படி சான்றளித்துள்ளார். மேலும் தங்களுக்கு 26.12.2022 அன்று மின்னிணைப்பு வழங்கும்போது அது பொது பாதையாக இல்லாமல் தனியார் பாதையாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது மேலும் செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில் அவர்களால் இடம் கள ஆய்வு செய்யப்பட்டதில் அந்த இடத்தில் ஊராட்சி துறை மூலம் தெருவிளக்கோ, குடிநீர் குழாய் இணைப்போ அல்லது பொதுப்பாதைக்கான எவ்வித பராமரிப்பும் இல்லாமல் அந்த புல எண்ணிற்குரிய நபர்கள் மட்டும் பயன்படுத்தும் தனிபாதையாகவே இருந்துள்ளது. ஆகவே தனியார் பாதையில் மின்சார வாரியத்தால் நடப்பட்டுள்ள மின் கம்பத்திற்குண்டான மதிப்பீட்டு கட்டணம் ரூ.19610/–யை ஏற்கனவே செலுத்துமாறு கொடுக்கப்பட்ட அறிவிப்பு கடிதத்திற்கு இதுவரை மனுதாரர் கட்டணம் செலுத்தாததால் மேற்படி மதிப்பீட்டு கட்டணமானது மின்னிணைப்பு எண்: 146–001–924 –ல் வசூல் செய்யும் பொருட்டு மின்கட்டணத்தோடு இணைத்துவிடப்பட்டது என்ற மின் உரிமையாளரின் வாதம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே இம்மனு மீது நடவடிக்கை தேவையில்லை என்பதால் முடித்து வைக்கப்படுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 11.10.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு T. விக்னேஷ் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு K. ரமேஷ், இளநிலை பொறியாளர்/விநியோகம்/ கீழகிருஷ்ணன்புதூர் மற்றும் திரு N.K. ஜவஹர் முத்து, செயற்பொறியாளர்/ விநியோகம் /

நாகர்கோவில், கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் புல எண்.1025/5A–க்குறிய பொது பாதையில் தற்காலிக மின் இணைப்பு வேண்டி மின் இணைப்பு பெற்று கொண்டதாகவும் பொதுப் பாதைக்கான பத்திரம் (தமிழக அளுநருக்கு எழுதிக்கொடுத்தது) சமர்பித்ததாகவும் அதனை TNEB ஏற்றுக் கொண்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 ஆனால் செயற்பொறியாளர்/விநியோகம்/நாகர்கோவில் அவர்களால் தவறுதலாக இடம் கள ஆய்வு செய்து தெருவிளக்கோ அல்லது குடிநீர் இணைப்போ இல்லை என்று Report செய்துள்ளதாகவும், எனவே மின் இணைப்பு வழங்க விஸ்தரிப்புக்கான திட்ட மதிப்பீட்டில் மின்கம்பம் நட்டு மின் இணைப்பு வழங்க மதிப்பிடு கட்டணம் ரூ.19,610/– செலுத்த வேண்டும் என்று மனு அனுப்பி உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 ஆனால் அந்த புல எண்ணிற்குரிய நபர்கள் குடிநீர் இணைப்பு பெற்றுள்ளார்கள் எனவும், Road – ல் இருந்து இந்த இணைப்பே தெருவிற்கான முதல் Street line connection என்பதால் தெருவிளக்கு தாங்கள் தான் அமைக்க முடியும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மனுதாரர் மின்னிணைப்பு வேண்டி online-ல் 06.12.2022 அன்று விண்ணப்பித்து 26.12.2022ல் மின்கம்பம் நட்டு மின்னிணைப்பு பெற்றுக்கொண்டதாகவும், 24.02.2023 அன்று மின்கம்பம் நட்ட பாதை பொதுபாதை இல்லையென்றும், அதனால் அதற்கான விஸ்தரிப்பு மதிப்பீட்டு கட்டணத் தொகை ரூ.19,610/- செலுத்துமாறு கடிதம் கிடைக்கப் பெற்றதாகவும், எனவே 27.02.2023 பொதுப்பாதைக்கான பத்திரம் கீழகிருஷ்ணன்புதூர் அலுவலகத்தில் சமர்பித்தும் மின்கம்பத்திற்கு உரிய மதிப்பிடு கட்டணம் இணையதளத்திலிருந்து நீக்கப்படவில்லை என்றும் பொதுப்பாதைக்கான பத்திரத்தை ஏற்றுக்கொண்டு மின்கம்பத்திற்கு உரிய மதிப்பிடு கட்டணத்தை இணையத்திலிருந்து நீக்கக்கோரி மனு செய்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 திருமதி. T. பத்மாவதி, கீழகிருஷ்ணன்புதூர் அவர்கள் கட்டுமான பணிக்காக புதிய மின் இணைப்பு வேண்டி 17.10.2022 அன்று இணையதளம் வழியாக விண்ணப்பித்து விண்ணப்ப எண். 14610221020 பதிவு கட்டணம் எதுவும் செலுத்தாத காரணத்தினால் விண்ணப்பம் 25.11.2022 அன்று ரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேலும் மனுதாரர் புதிய மின்னிணைப்பு வேண்டி மறுபடியும் 28.11.2022 அன்று இணையதளம் வழியாக விண்ணபித்து 06.12.2022 அன்று பதிவுக்கட்டனாம் செலுத்தியதின் அடிப்படையில் இளநிலை பொறியாளர்/ விநியோகம்/ கீழகிருஷ்ணன்புதூர் அவர்கள் இடத்தை ஆய்வு செய்து மின்னிணைப்பு வழங்க மதிப்பீடு தயார் செய்து மனுதாரர் பொதுப்பாதை என்று கூறியதின் அடிப்படையில் அனுமதி பெற்று ஒரு மின்கம்பம் நட்டு 26.12.2022 அன்று வீதப்பட்டி VI-ல் வீட்டு கட்டுமான பணிக்காக மின் இணைப்பு எண். 146-001-924 வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மனுதாரரிடம் புல எண் 1025/5-ல் உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போடப்பட்டுள்ள பாதை பொதுபாதை எனில் அது சம்பந்தமாக வருவாய்த்துறை ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு வாய்மொழியாக கேட்டுகொள்ளப்பட்டதாகவும், மனுதாரர் பொது பாதைக்கான ஆவணங்கள் சமர்ப்பிக்காத காரணத்தால் இளநிலைபொறியாளர்/ விநியோகம்/ கீழகிருஷ்ணன்புதூர் அவர்கள் க.எண்:19/இ.நி.பொ/கீ.கி.பு/கோ.தனி/

2023, நாள் 21.01.2023–ன்படி தலைவர், பள்ளம் துறை ஊராட்சி, பள்ளம் அவர்களிடம் புல எண்:1025/5 ல் உள்ள பாதைகள் பள்ளம் ஊராட்சிக்குட்பட்ட பொதுப்பாதை எனில் அதற்குரிய சான்றிதழ் வழங்குமாறு கேட்டுகொள்ளப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 தலைவர், பள்ளம் துறை ஊராட்சி, பள்ளம் – 629601, கன்னியாகுமரி மாவட்டம். கடித நாள் 28.01.2023 – ன்படி 1025/5 –ல் உள்ள பாதையை பள்ளம்துறை ஊராட்சிக்கு இதுவரை எழுதி தரப்படவில்லை என தெரிவித்துள்ளதாகவும், அதனால் க.எண்:40/இ.நி.பொ/ கீ.கி.பு/ கோ.கட்டு/2023, நாள் 22.02.2023–ன் வழியாக திருமதி. T. பத்மாவதி அவர்களுக்கு தனியார் பாதையில் நடப்பட்ட புதிய மின்கம்பத்திற்கான மதிப்பீட்டு கட்டணம் ரூ.19,610/–யை 22.03.2023–க்குள் வரைவோலை மூலம் செலுத்தி ரசீது பெற்று கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்பட்டதாகவும், பின்னர் திருமதி T.பத்மாவதி, கீழகிருஷ்ணன்புதூர் அவர்கள் 27.02.2023 அன்று அலுவலகத்தில் அளித்த நன்கொடை பத்திர நகலில் சம்பந்தப்பட்ட பாதை வேறு ஊராட்சியான கீழகிருஷ்ணன்புதூர் ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் மேதகு ஆளுநர் பெயருக்கு சமர்பிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 எனவே இளநிலை பொறியாளர்/ விநியோகம்/ கீழகிருஷ்ணன்புதூர் அவர்கள் மீண்டும் க.எண்: 63/இ.நி.பொ/கீ.கி.பு/ கோ.தனி/ 2023, நாள் 16.03.2023–ன்படி தலைவர், பள்ளம் ஊராட்சிதுறை, பள்ளம் அவர்களிடம் மேற்படி புல எண்:1025/5 ற்குரிய பாதை பள்ளம் ஊராட்சிக்குட்பட்டது எனில் அதற்குரிய சான்றிதழ் வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், அதற்கு தலைவர், பள்ளம் ஊராட்சித்துறை, பள்ளம் 629 601, கன்னியாகுமரி மாவட்டம் நாள் 27.04.2023–ன்படி பள்ளம் ஊராட்சிக்குட்பட்ட புல எண்:1025/5–ல் உள்ள பாதையை 16.09.2022 அன்று தவறுதலாக கீழகிருஷ்ணன்புதூர் ஊராட்சிக்கு எழுதி கொடுத்ததால் பாதையை 13.04.2023 அன்று பிழை திருத்த பத்திரம் மூலம் பள்ளம்துறை ஊராட்சிக்கு மேற்படி பாதையை பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளார் என தலைவர், பள்ளம் ஊராட்சிதுறை, பள்ளம் 629 601, கன்னியாகுமரி மாவட்டம். நாள் 27.04.2023 –ன்படி தெரிவித்துள்ளார் எனவும், 16.09.2022 நாளிட்ட நன்கொடை பத்திரம் என மனுதாரர் தனது மனுவுடன் இணைத்து அனுப்பியுள்ள பாதை

மனை, தமிழ்நாடு அரசால் நகர் ஊரமைப்புத் துறையின் கீழ் அமையும் உள்ளூர்திட்டக் குழுமத்தின் மூலம், மேற்படி பாதை மனையை பொது பாதை என மனுதாரர் உரிய முறையில் அனுமதி பெற்று அதன் அனுமதி உத்தரவு நகலை மனுதாரர் இணைக்கவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேலும் அந்த அனுமதி மீது சம்மந்தப்பட்ட பள்ளம் ஊராட்சியின் மன்ற ஒப்புதலும் பெற்று, அதன் நகலும் இணைக்கவில்லை எனவே இந்நிலையில் மேற்படி உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் ஊராட்சியின் மன்ற ஒப்புதலும் இணைக்காமல் இருப்பதால் இதனை அரசால் ஒப்புதல் பெற்ற பொதுப்பாதைமனை என வகைப்படுத்த இயலாது என தெரிவிக்கப்படுவதாகவும், மேலும் As per Tamil Nadu Government Gazette dated 4.02.2019 Part –III–Section 1(a) Tamilnadu combined Development and Building Rules 2019 யில் பத்தி 47, Layout and sub–division Rules 1(a)– யில் The minimum width of the Public street or road on which the site abuts or gains access shall be 7.2 M. for residential layout developments இருக்க வேண்டும் ஆனால் மனுதார் சமர்ப்பித்த நன்கொடை பத்திரத்தில் பாதை மனையின் அகலம் 1.2 மீட்டர்தான் உள்ளதால் அதை பொதுப்பாதையாக எடுத்துக்கொள்ளமுடியாது எனவே தனிப்பாதை என்பதால் அந்த பாதையில் நிறுவப்பட்டுள்ள மின்கம்பத்திற்கு மனுதாரர் பணம் செலுத்த வேண்டும் என சமர்பிக்கப்படுவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மேலும் மனுதாரருக்கு 26.12.2022 அன்று மின்னிணைப்பு வழங்கும்போது அது பொதுப் பாதையாக இல்லாமல் தனியார் பாதையாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. விண்ணபபதாரர் அளித்த கிரயம் பத்திரம் நாள், 15.11.2021–யின் படி திரு. சகாயதாஸ் அவர்களின் மனைவி திருமதி, சகாய றோசி அவர்கள் திரு. தங்கசுவாமி அவர்களின் மனைவி திருமதி. பத்மாவதிக்கு தெங்கம்புதூர் கிராமம் புதிய சர்வே எண் 1025/5–யில் தெற்கணைய 4 1/4 சென்றுக்கு சமமான புல எண்.1025/A1 இடம் இதில் எவ்வகையாக கிழக்கு பக்கம் நம்மில் 1–வது நபர் முதல்பேருக்கு சொந்தமான பொது சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேற்படி புல எண்.1025/5 – யிலுள்ள இடம் தமிழக அரசின் அனுமதி பெறாத வீட்டு மனை பிரிவு ஆகும் எனவும் மேலும் செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில் அவர்களால் இடம் கள ஆய்வு செய்யப்பட்டதில் அந்த இடத்தில் ஊராட்சி துறை மூலம் தெருவிளக்கோ, குடிநீர் குழாய்

இணைப்போ அல்லது பொதுப்பாதைக்கான எந்தவித பராமரிப்பும் இல்லாமல் அந்த புல எண்ணிற்குறிய நபர்கள் மட்டும் பயன்படுத்தும் தனிப்பாதையாகவே இருந்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேலும் மேற்கூறிய விளக்கங்கள் படியும் தனியார் பாதையில் மின்சார வாரியத்தால் நடப்பட்டுள்ள மின் கம்பத்திற்குண்டான மதிப்பீட்டு கட்டணம் ரூ.19,610/-யை ஏற்கனவே செலுத்துமாறு கொடுக்கப்பட்ட அறிவிப்பு கடிதத்திற்கு இதுவரை மனுதாரர் கட்டணம் செலுத்தாததால் மேற்படி மதிப்பீட்டு கட்டணமானது மின்னிணைப்பு எண்: 146-001-924-ல் வசூல் செய்யும் பொருட்டு மின்கட்டணத்தோடு 23.05.2023 அன்று இணைத்துவிடப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மனுதாரர் 22.08.2023 அன்று வரையிலும் (90 நாட்களுக்கும் மேல்) மதிப்பீடு கட்டணம் செலுத்தாத காரணத்தாலும் வாரிய விதிகளின்படி மின் துண்டிப்பு செய்வதற்கான பட்டியலில் இருந்து வந்ததாலும் 22.08.2023 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் 1025/5A1, ரைஸ் மில் ஜங்ஷன், கீழக்கிருஷ்ணன் புதூர் என்ற முகவரியில் தற்காலிக மின்னிணைப்பு வேண்டி online-ல் 06.12.2022 அன்று விண்ணப்பித்து 26.12.2022-இல் மின்கம்பம் நட்டு மின்னிணைப்பு பெற்றுக்கொண்டதாகவும், 24.02.2023 அன்று மின்கம்பம் நட்ட பாதை பொதுபாதை இல்லையென்றும், அதனால் அதற்கான கட்டணத் தொகை ரூ.19,610/- செலுத்துமாறு கடிதம் கிடைக்கப் பெற்றதாகவும், எனவே 27.02.2023 பொதுப்பாதைக்கான பத்திரம் கீழகிருஷ்ணன்புதூர் அலுவலகத்தில் சமர்பித்தும் மின்கம்பத்திற்கு உரிய மதிப்பிடு கட்டணம் இணையதளத்திலிருந்து நீக்கப்படவில்லை என்றும் பொதுப்பாதைக்கான பத்திரத்தை ஏற்றுக்கொண்டு மின்கம்பத்திற்கு உரிய மதிப்பிடு கட்டணத்தை

இணையத்திலிருந்து நீக்கக்கோரி மனு செய்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் தற்காலிக மின் இணைப்பு வேண்டி 28.11.2022 அன்று இணையதளம் வழியாக விண்ணப்பித்து 06.12.2022 அன்று பதிவுக்கட்டணம் செலுத்தியதின் அடிப்படையில் இளநிலை பொறியாளர்/கீழகிருஷ்ணன்புதூர் அவர்கள் இடத்தை ஆய்வு செய்து மின்னிணைப்பு வழங்க மதிப்பீடு தயார் செய்து மனுதாரர் பொதுப்பாதை என்று கூறியதின் அடிப்படையில் அனுமதி பெற்று ஒரு மின்கம்பம் நட்டு 26.12.2022 அன்று மதிப்பிடு VI-ல் வீட்டு கட்டுமான பணிக்காக மின் இணைப்பு எண். 146-001-924 வழுங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரிடம் புல எண் 1025/5-ல் உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போடப்பட்டுள்ள பாதை பொதுபாதை எனில் அது சம்பந்தமாக வருவாய்த்துறை ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு வாய்மொழியாக கேட்டுகொள்ளப்பட்டதாகவும், மனுதாரர் பொது பாதைக்கான ஆவணங்கள் சமர்ப்பிக்காத காரணத்தால் இளநிலைபொறியாளர்/கீழகிருஷ்ணன்புதூர் அவர்கள் 21.01.2023 நாளிட்ட கடிதப்படி தலைவர், பள்ளம் துறை ஊராட்சி, பள்ளம் அவர்களிடம் புல எண்:1025/5 ல் உள்ள பாதைகள் பள்ளம் ஊராட்சிக்குட்பட்ட பொதுப்பாதை எனில் அதற்குரிய சான்றிதழ் வழங்குமாறு கேட்டுகொள்ளப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 தலைவர், பள்ளம் துறை ஊராட்சி, கடித நாள் 28.01.2023 – ன்படி 1025/5 –ல் உள்ள பாதையை பள்ளம்துறை ஊராட்சிக்கு இதுவரை எழுதி தரப்படவில்லை என தெரிவித்துள்ளார். மின்கம்பம் நடப்பட்ட பாதை பொது பாதை என்பதற்கான ஆவணங்கள் இல்லாததால் 22.02.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளரிடம் தனியார் பாதையில் நடப்பட்ட புதிய மின்கம்பத்திற்கான மதிப்பீட்டு கட்டணம் ரூ.19,610/-யை செலுத்துமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 அதன் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் 27.02.2023 அன்று சம்பந்தப்பட்ட பாதை வேறு ஊராட்சியான கீழகிருஷ்ணன்புதூர் ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலர்

மூலம் மேதகு ஆளுநர் பெயருக்கு சமர்ப்பிக்கப்பட்ட நன்கொடை பத்திர நகலினை கொடுத்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 எனவே இளநிலை பொறியாளர்/ கீழகிருஷ்ணன்புதூர் அவர்கள் மீண்டும் 16.03.2023 நாளிட்ட கடிதத்தின்படி தலைவர், பள்ளம் ஊராட்சிதுறை, பள்ளம் அவர்களிடம் மேற்படி புல எண்:1025/5 ற்குரிய பாதை பள்ளம் ஊராட்சிக்குட்பட்டது எனில் அதற்குரிய சான்றிதழ் வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், அதற்கு தலைவர், பள்ளம் ஊராட்சித்துறை, பள்ளம் நாள் 27.04.2023-ன்படி பள்ளம் ஊராட்சிக்குட்பட்ட புல எண்:1025/5-ல் உள்ள பாதையை 16.09.2022 அன்று தவறுதலாக கீழகிருஷ்ணன்புதூர் ஊராட்சிக்கு எழுதி கொடுத்ததால் பாதையை 13.04.2023 அன்று பிழை திருத்த பத்திரம் மூலம் பள்ளம்துறை ஊராட்சிக்கு மேற்படி பாதையை பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளார் என தெரிவித்துள்ளார்.

7.8 16.09.2022 நாளிட்ட நன்கொடை பத்திரம் என மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள ஆவணத்தில் சம்பந்தப்பட்ட பாதை மனை, தமிழ்நாடு அரசால் நகர் ஊரமைப்புத் துறையின் கீழ் அமையும் உள்ளூர்திட்டக் குழுமத்தின் மூலம், மேற்படி பாதை மனையை பொது பாதை என உரிய முறையில் அனுமதி பெற்று அதன் அனுமதி உத்தரவு நகலை மேல்முறையீட்டாளர் இணைக்கவில்லை எனவும், மேலும் அந்த அனுமதி மீது சம்பந்தப்பட்ட பள்ளம் ஊராட்சியின் மன்ற ஒப்புதலும் பெற்று, அதன் நகலும் இணைக்கவில்லை. எனவே இந்நிலையில் மேற்படி உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் ஊராட்சியின் மன்ற ஒப்புதலும் இணைக்காமல் இருப்பதால் இதனை அரசால் ஒப்புதல் பெற்ற பொதுப்பாதைமனை என வகைப்படுத்த இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார மின் பகிர்மான விதித்தொகுப்பு விதி 45(1) மற்றும் 29(11)(c)-ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"45.(1) Service Connection Charges:** Regarding the recovery relating to service connection charges:*
>
> *(i) For connecting up an installation, the Licensee shall be entitled to charge the consumer the actual cost of materials upto meter board, labour, transport plus overhead charges.*
>
> *(ii) Extension, improvement or alteration to service lines to meet any additional demand will*

*be charged on the same basis. In each case, the consumer will be furnished with an estimate of the cost of the work and this amount is payable in advance. On completion of the work, a bill for the actual amount payable will be forwarded to the consumer and any difference shall be paid by the consumer or will be refunded by the Licensee as the case may be."*

*29 Service lines:*
*11 (a) xxx*
*(b) xxxx*
*(c) Installatiuon of Distribution Transformer with associated equipment/accessories viz. AB switch, HG fuse, DT structure/pole shall be carried out by the Licensee at the Licensee's cost. The cost of installation works from the Distribution Transformer to the consumer's meter including protion of any HT line within the consumer's premises when the Distribution Transformer is erected in the consumer's premises, shall be borne by the applicant."*

7.10 மேற்கூறிய விதியை ஆராயும் போது, ஒரு நிறுவல் தொகுப்பு இணைப்பு தர, உரிமதாரர், மின்னளவிப் பலகை வரையுள்ள பொருள்களுக்கும் அவற்றின் போக்குவரத்துக்கும், அவற்றை நிறுவத் தேவைப்படும் உழைப்புக்கும் மேற்பார்வைக்கும் ஏற்படும் செலவுகளுக்கான அடக்க விலையை, நுகர்வோருக்குக் கட்டணமாக விதிக்கலாம் எனவும் கூடுதல் மின் சுமைகளைத் தரும்போது, நீட்டிப்பு, மேம்பாடு மாற்றங்கள் ஏதாவது மின்னிணைப்புத் தொடரில் செய்து தரப்பட்டால் அதற்கேற்ற கட்டணங்கள் விதிக்கப்படும். ஒவ்வொரு நிகழ்விலும் அல்லது வகையிலும் பணிக்கான அடக்க விலை மதிப்பீடு, நுகர்வோருக்கு தரப்படும். இத்தொகையை அவர் முன்கூட்டியே செலுத்த வேண்டும். பணி முடிந்ததும், நுகர்வோருக்கு அவர் உண்மையிலேயே கட்ட வேண்டிய தொகைக்கான பட்டியல் அனுப்பப்படும் நிகழ்விற்கேற்ப உரிய வேறுபாட்டுத் தொகைகள் நுகர்வோரால் செலுத்தப்படவோ அல்லது உரிமதாரரால் திருப்பித் தரப்படவோ வேண்டும் என தெரியவருகிறது.

7.11 மேலும் மின்பகிர்மான மின்மாற்றி, அதனுடன் இணைந்த சாதனம்/துணைக் கருவிகள் அதாவது இணைப்பில் காற்றுத் திறப்பான், கொம்பு இடைவெளி எரியிழை, மின்மாற்றி கோபுர அமைப்பு/கம்பம் அமைக்கும் பணியானது, உரிமதாரரின் செலவில் உரிமதாரரால் நிறைவேற்றப்படுதல் வேண்டும். மின்நுகர்வோர் வளாகத்தினுள் மின்பகிர்மான மின்மாற்றி நிறுவப்படும் போது மின்நுகர்வோரின் வளாகத்தினுள் உயர் அழுத்த மின்தொடரின் எந்த ஒரு பகுதி உள்ளடங்கலாக மின்பகிர்மான மின்மாற்றியிலிருந்து மின்நுகர்வோரின் மின்னளவி வரையுள்ள நிறுவுதல்

பணிகளுக்கான செலவுகள் விண்ணப்பதாரரால் ஏற்கப்படுதல் வேண்டும் என தெரியவருகிறது.

7.12 இவ்வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் இருதரப்பு வாதங்களின்படி மேல்முறையீட்டாளர் பொது பாதைக்கான ஆவணங்கள் சமர்ப்பிக்காத காரணத்தால் இளநிலைபொறியாளர்/கீழகிருஷ்ணன்புதூர் அவர்களின் 21.01.2023 நாளிட்ட கடிதப்படி தலைவர், பள்ளம் துறை ஊராட்சி அவர்களிடம் புல எண்:1025/5 ல் உள்ள பாதைகள் பள்ளம் ஊராட்சிக்குட்பட்ட பொதுப்பாதை எனில் அதற்குரிய சான்றிதழ் வழங்குமாறு கேட்டுகொள்ளப்பட்டதாகவும், தலைவர், பள்ளம் துறை ஊராட்சி அவர்களின் கடித நாள் 28.01.2023 – ன்படி 1025/5 –ல் உள்ள பாதையை பள்ளம்துறை ஊராட்சிக்கு இதுவரை எழுதி தரப்படவில்லை என தெரிவித்ததாகவும் அறியமுடிகிறது. எனவே, மின்கம்பம் நடப்பட்ட பாதை பொது பாதை என்பதற்கான ஆவணங்கள் இல்லாததால் 22.02.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளரிடம் தனியார் பாதையில் நடப்பட்ட புதிய மின்கம்பத்திற்கான மதிப்பீட்டு கட்டணம் ரூ.19,610/–யை செலுத்துமாறு எதிர்மனுதாரரால் அறிவிக்கை வழங்கப்பட்டதாக தெரியவருகிறது.

7.13 அதன்பிறகு பெறப்பட்ட தலைவர், பள்ளம் ஊராட்சித்துறை, பள்ளம் அவர்களின் 27.04.2023 நாளிட்ட கடிதத்தின்படி பள்ளம் ஊராட்சிக்குட்பட்ட புல எண்:1025/5–ல் உள்ள பாதையை 16.09.2022 அன்று தவறுதலாக கீழகிருஷ்ணன்புதூர் ஊராட்சிக்கு எழுதி கொடுத்ததால் பாதையை 13.04.2023 அன்று பிழை திருத்த பத்திரம் மூலம் பள்ளம்துறை ஊராட்சிக்கு மேற்படி பாதையை பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளதாக அறியப்படுகிறது. ஆனால் தமிழ்நாடு அரசின் நகர் ஊரமைப்புத் துறையின் கீழ் அமையும் உள்ளூர்திட்டக் குழுமத்தின் மூலம், மேற்படி பாதை மனையை பொது பாதை என உரிய முறையில் அனுமதி பெற்று அதன் அனுமதி உத்தரவு நகலை மேல்முறையீட்டாளர் இணைக்கவில்லை என்பதால் அதனை அரசால் ஒப்புதல் பெற்ற பொதுப்பாதை மனையாக வகைப்படுத்த இயலாது என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதாகவே உள்ளது.

7.14 எனவே, மேல்முறையீட்டாளர் தமிழ்நாடு அரசின் நகர் ஊரமைப்புத் துறையின் கீழ் அமையும் உள்ளூர்திட்டக் குழுமத்தின் மூலம், மேற்படி பாதை மனையை பொது பாதை

என உரிய முறையில் அனுமதி பெற்று அதன் அனுமதி உத்தரவு நகலை எதிர்மனுதாரரிடம் சமர்பிக்குமாறு தீர்வு செய்யப்படுகிறது. அவ்வாறு உத்தரவு நகலை சமர்பிக்கும் நேர்வில், எதிர்மனுதாரர் தனியாருக்கு பாத்தியப்பட்ட பாதையாக கருதி தமிழ்நாடு மின்சார மின் பகிர்மான விதித்தொகுப்பு விதி 45(1)–இன்படி விதிக்கப்பட்ட மின் கம்பத்திற்குண்டான மதிப்பீட்டு கட்டணத்தை ரத்து செய்யுமாறு தீர்வு செய்யப்படுகிறது.

## 8.0 <u>முடிவுரை</u>:

8.1 மேற்கண்ட பத்தி 7–ல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளர் தமிழ்நாடு அரசின் நகர் ஊரமைப்புத் துறையின் கீழ் அமையும் உள்ளுர்திட்டக் குழுமத்தின் மூலம், மேற்படி பாதை மனையை பொது பாதை என உரிய முறையில் அனுமதி பெற்று அதன் அனுமதி உத்தரவு நகலை மேல்முறையீட்டாளர் சமர்பிக்கும் நேர்வில் எதிர்மனுதாரர் தனியாருக்கு பாத்தியப்பட்ட பாதையாக கருதி தமிழ்நாடு மின்சார மின் பகிர்மான விதித்தொகுப்பு விதி 45(1)–இன்படி விதிக்கப்பட்ட மின் கம்பத்திற்குண்டான மதிப்பீட்டு கட்டணத்தை ரத்து செய்யுமாறு உத்தரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 59/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திருமதி T. பத்மாவதி, – By RPAD
1025/5A1, றைஸ்மில் ஜங்ஷன்,
மதுசூதனபுரம், கீழகிருஷ்ணன்புதூர்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 601.

2. இளநிலை பொறியாளர்/விநியோகம்/ கீழகிருஷ்ணன்புதூர்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கீழகிருஷ்ணன்புதூர் – 629601.

3. செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

4. மேற்பார்வை பொறியாளர், – By Email
**கன்னியாகுமரி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.